புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சித்தர் இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள்

சீ.புவனேஸ்வரி
No.1/296 A, Kavaraikulam
Street, Sholavaram, Chennai 600067.

ஆய்வுச் சுருக்கம்

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் குறிப்புடன் இயங்குவதே சித்தர் நெறி ஆகும். சமுதாயத்திற்கு பயன்படும் வகையில் புலன்களை அடக்கி மன ஒருமைப்பாட்டுடன் மூச்சு நிலையறிந்து அதை தான் விரும்பியவாறு முறைப்படுத்தி ஊணாகி உடம்பை ஆலயமாக மாற்றும் ஞானம் பெற்றோரே சித்தர்கள். அவர்தம் அகத்தில் உதித்த அறிவியல் சிந்தனைகள் குறித்தும் குறிப்பாக வானவியல் மருத்துவம் உடல் தத்துவம் குறித்தும் ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது

ஆய்வு நெறிமுறைகள்

சித்தர் பாடல்கள் அறிவார்ந்த நோக்கத்தோடு அறிவியல் பார்வை கொண்டு கருவிகள் இல்லாத காலத்தில் நுண்ணோக்கு சிந்தனையோடு படைக்கப்பட்டன. இக்கட்டுரை சான்று மூலங்களின் மூலம் தக்க முடிவை அடையும் முறையில் ஆராயப்பட்டுள்ளது பிற சித்தர் பாடல்களின் கருத்துக்களை ஒப்பிட்டும் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது கருத்து விளக்க முறையிலும் மதிப்பீட்டு ஆய்வு முறையிலும் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.

முன்னுரை

வாழ்வியலை படம் பிடித்து காட்டும் கால கண்ணாடி இலக்கியங்கள் கல்தூன்றி மண் தோன்றா காலத்தை முன் தோன்றிய மூத்த குடி தமிழ் குடி அக்குடியில் தோன்றிய சித்தர்கள் குறித்தும் படைப்பிலக்கியத்தில் அறிவியல் கூறுகள் குறித்தும் ஆய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

சித்தர் விளக்கம்

சித்தர்கள் சாகா நிலையை பெற்றவர்கள் அழியாத உடம்பை பெற்றவர்கள் உடம்பை அழிந்து போகாமல் பாதுகாக்கும் வழி அறிந்தவர்கள் தம்முடைய உடம்பை அப்படியே வைத்துவிட்டு மற்றொரு உடம்பிலே புகுந்து நடமாடும் சக்தி படைத்தவர்கள் இதற்கு கூடுவிட்டு கூடு பாய்தல் என்று பெயர் சித்தர்களுக்கு வானமார்க்கமாக செல்லும் சக்தியும் உண்டு முக்காலங்களை பற்றியும் அறியும் ஞானமும் உண்டு பலவிதமான அற்புதங்களை செய்யும் ஆற்றலும் உண்டு1

மக்கள் சமுதாயத்தில் மலிந்து நின்ற பொய்மைகளை எதிர்த்து புரட்சி செய்த இயக்கத்தினராக தோன்றியவர்களே சித்தர்கள். இவர்கள் மக்களிடையே வாழ்ந்து, ஆசைகளில் உழன்று அனுபவத்தாலும் பட்டறிவாலும் மனித வாழ்வின் உண்மைகளை உணர்ந்து உருவானவர்கள்.

வாசி அறிந்து யோகம் கூடி உள்ளே வழிநடத்தி மூலாதாரத்தில் கனலெழுப்பி முறையே மூன் டெழுந்த சோதியை ஆதாரங்கள் வழியாக செலுத்தி புருவ மத்தியாம் நிறுத்தி ஞான சோதியை தோற்றுவித்தனர் இவ்வாறாக ஞான யோக நிட்டைநிலைகளையும் ஆதாரங்களின் அருமைனையும் ஜீவாதாரணமான வாசி என்னும் உயிர் இயக்க முறைகளையும் சித்தர்கள் பல்வேறு பட்ட முறையில் வெளிப்படையாகும் குறிப்பாகவும் விளக்கியுள்ளனர்

சித்தர்கள் தொகையைப் போலவே அவர் தம் இலக்கியப் பாடுபொருளும் யோகம், ஞானம், ரசவாதம், குளிகை, மருத்துவம் என்று பல்கிப் பெருகி உள்ளன .

மனிதன் அகத்தில் உதித்த அறிவியல் சிந்தனை

அறிவியல் வளர்ச்சியின் வேகத்திற்கு ஏற்ப மனிதன் விரைந்து முன்னேற வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகிறது

இன்றைய கால போக்கும் தொழில் வளர்ச்சியும் அறிவியல் கண்டுபிடிப்புகளை பின்னணியாக கொண்டு இயங்குகின்றன அறிவியல் சிந்தனைகளை தமிழில் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் எழுந்து விட்டது. அறிவு வளர்ச்சியோடு அறிவியல் உணர்வுகளும் சிந்தனை ஆற்றலும் கற்பனை திறனும் இருந்தால் உலகளவில் நாமும் இணைய முடியும். இக்கருத்தில் தமிழன் என்றும் பின்தங்கியவன் இல்லை சிந்திக்காதவனும் இல்லை.

உயிரியல் இயற்பியல் வேதியல் மின்னியல் என்று பலத்துறைகளும் சிந்தித்து அவன் மனதில் அறிவியல் கூறுகள் விதைக்கப்பட்டுள்ளன .

பேரண்டம் சிற்றண்டம்

அண்டம் குறித்து தெளிவான சிந்தனையை சித்தர்கள் கொண்டிருந்தார் அத்திப்பழம் போலும் பேரண்டம் அதற்குள் அமைந்த வித்துக்கள் போல்வன சிற்றண்டங்கள் பேரண்டம் 1008 கூடியது ஒரு புவனம் இவ்வகை கொண்ட புவனம் 2214 கூடியது ஒரு சாகரம். சாகரம் ஏழு கூடியது ஒரு பதம் 816 பதம் கூடியது பிரபஞ்சம் என நிஜமானந்த போதம் (பக்கம் 450) குறிப்பிடுகின்றது.

அண்டவெளி

இதை பால்வீதி ,பால் வெளி எனவும் குறிப்பிடுவர் பால்வீதி தூசு நிறைந்தது என வானவியல் அறிஞர் கண்டறிந்துள்ளனர். இக்கருத்தை சட்டை முனியும்

தூசி என்ற வெளியல்லோ அண்டவீதி
சொக்காமல் கிரிக்கொண்டே ஆக்கியேரே

என குறிப்பிடுகின்றார்

வேர்கண்ட வாயிரத் தெட்டண்ட கூட
வீதி எல்லாமோர் நொடிக்குள் விரைந்து சென்றேன்

என்ற காகபுகண்டரின் உபநிடத பாடலில் வீதி என சொல்லப்படுவது பால்வீதி ஆகும் . 1008 அண்ட வீதி எல்லாம் ஓர் நொடிக்குள் கடந்து சென்றதாக காகபுசுண்டர் கூறுவது காலமும் இடமும் சுருங்கிய தன்மையை குறிக்கிறது.

அண்டமும் தாண்டவமும் அண்டவெளியிலிருந்து வரும் காஸ்மிக் கதிர்களால் காற்று வெளியில் புதிய துகள்கள் தோன்றுகின்றன பழைய துகள்கள் அழிகின்றன. ஒரு துகள் மற்றொரு துகளுடன் மோதும் போது சக்தி வெளிப்படுகிறது இதனை சிவதாண்டவம் என்பர். சிவதாண்டவம் அண்டத்தின் இயக்கத்தை விளக்கும் வகையில் உள்ளதாக கூறுவர்

உறைந்திட்ட ஐவருந்தான் நடனங்காணும்
ஒளிவெளியும் சிலம்பொலியு ஒன்றாய் காணோம் 2

என்று சிவதாண்டவத்தில் ஒளி ஒலி காட்சி ஒருங்கே நிகழும் தன்மையை அகத்தியர் காட்டுகிறார்

பண்டைத் தமிழரின் வானியல் புலமையை உணர்த்தும் வகையில் சித்தர் பாடல்கள் பலவற்றில் வானியர் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

மின் எழுப்பி விண்ணகத்தின் மின் ஒடுங்கு மாறுபோல்
எண்ணகத்துள் ஈசனோடு யானும் அல்ல தில்லையே 3

விண்ணில் மின்னல் எழும்பி விண்ணிலேயே அடங்குவது போல் இறைவன் என் அகத்துக்குள் குடிகொண்டிருக்கின்றான் என்ற செய்தியை சிவவாக்கியர் தம் பாடல் பாடலில் விளக்குகின்றார்

மருத்துவத்தில் சித்தர் பார்வை

"உணவே மருந்து மருந்தே உணவு"

*நம் உடல் ஆரோக்கியமாக இருந்தால் நாம் அன்றாடம் செய்ய வேண்டிய வேலைகளை செவ்வனே செய்ய முடியும்.*

*சுவர் இருந்தால்தான் சித்திரம் அடைய முடியும்*

*என்பது பழமொழி.*

*நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் மொழிக்கும் ஆற்ற வேண்டிய கடமையை நன்கு செய்ய முடியும். நம் உடம்பைப் பற்றிய கவலை கொள்ளாத போது நோய்களுக்கு ஆளாகி விடுகின்றோம்*

*நந்தவனத்தில் ஓர் ஆண்டி -அவன்*
*நாளாறு மாதமாய் குயவனை வேண்டி*
*கொண்டு வந்தான் ஒரு தோண்டி அதைக்*
*கூத்தாடி கூத்தாடி போட்டுடைத்தாண்டி 4*

*என்கிறார் சித்தர் பெருமான்*

*இதன் உட்பொருளாவது இறைவன் அருளால் பத்து மாதம் சுமந்து பெற்ற இம் மனித உடலை நல்ல முறையில் காப்பாற்றி பாதுகாக்க தெரியாதவர்கள் இவ்வுலக இன்ப துன்பங்களில் உழன்று அழிந்து போகிறான் என்பதேயாகும் .*

*சித்தர்கள் கண்ட மருத்துவ துறை*

*உலகமும் மனிதனும்*

*உலகம் ஒரு அண்டம் மனிதன் அதில் ஒரு சிறிய பிண்டம் அண்டத்தில் இயங்கும் அத்தனை சக்திகளும் பிண்டத்திலும் இயங்குகின்றன மண் விண் நீர் தீ காற்று என்னும் இப்பெரும் சக்திகள் இவ்வைம்பொருள் மூலங்கள் அண்டம் பிண்டம் ஆகிய இரண்டிற்கும் மூலாதாரமாக அமைகின்றன. இப்பெரும் சக்திகள் மனித உடலில் மூன்று பெரும் உயிர் சக்திகளாக கூட்டுறவாகிய இயங்கும்.*

*தமிழ் மருத்துவத்தில் இம்மூன்று பெரும் சக்திகளே உயிர்த் தாதுக்கள் என அழைக்கப்படுகின்றன. அவை யாவன,*

1. *வாதம் - விண்ணும் காற்றும் இணைந்தது (ஆக்கும் ஆற்றல் உடையது)*
2. *பித்தம் (தீ காக்கும் ஆற்றல் உடையது*
3. *ஐ (கபம்) மண்ணும் நீரும் இணைந்தது அழித்தல் ஆற்றல் உடையது*

*இம்மூன்றும்1:1 ½ :1 ¼ - மாத்திரை அளவு விகித அளவில் உடலில் ஏற்படும் போது உடல் இயங்குதற்குறிய சக்தி Metabolic Energy தோன்றுகிறது*

*"வழங்கிய வாதம் மாத்திரை ஒன்றாகி*
*தழங்கிய பித்தம் தன்னில் அமைவான்" 5*

*மாத்திரை*

*உடல் நோயைக் களைந்து உளநோயை போக்கி நோய் வராமல் காத்து சாவை தடுக்கும் திறன் கொண்டதே உண்மையான மருந்தாகும் என்பார் திருமூலர்*

*சில சரக்குகளை சேர்த்து சில இலைச்சாறுகளினால் ஆவது குடிநீர்களால் ஆவது அரைத்து தேவையான அளவுகளை உருட்டி உலர்த்தி எடுத்து வைத்துக் கொள்வதற்கு மாத்திரை அல்லது உருண்டை என்று பெயர்கள் வழங்குவதுண்டு. போகர் கற்ப ராஜன் மாத்திரை6 என்பதை விளக்கமாக எடுத்து இயம்புகின்றார் இம்மாத்திரையில் பாடாணம், கார சாரம் சூதம் செய நீர், மூலிகை பொருள்கள் மூலிகைச் சாறு மணிகள் கடை சரக்கு அனைத்தும் கலந்திருக்கிறது இம்மாத்திரையால் பல நோய்கள் குணமாகும் இம்மாத்திரையை காய சித்தி மருந்து என்றும் அழைக்கலாம். போகரின் மருத்துவ ஆற்றலுக்கு இம்மாத்திரை ஒன்றே போதுமானதாகும்7*

*புறமருந்து*

*உடலில் வரும் கட்டி முதலியவற்றை அறுத்தெடுத்து விட்டு அக்காயத்தை குணப்படுத்துவார்கள் அறுக்கும் போது வலி ஏற்படாது இருக்க சில முறைகளை பயன்படுத்தினார்கள் உடலின் உள்ளே செல்லுமாறு உண்ணாமல் வெளியே பயன்படுமாறு அமைந்தாகும். இவை 1.கட்டு 2.பற்று 3.ஒற்றடம் 4.பூச்சு 5.வேது 6.பொட்டணம் 7.தொக்கணம் 8.புகை 9.மை 10.பொடி திமிர்தல் 11. கலிக்கம் 12.நசியம் 13.ஊதல் 14.நாசிகா பரணம் 15.களிம்பு*

16.சீலை 17.நீர் 18.வர்த்தி 19.சுட்டிகை 20.சலாகை 21.பசை 22.களி 23.பொடி 24.முறிச்சல் 25.கீறல் 26.காரம் 27.அட்டை விடல் 28.அறுவை 29.கொம்பு கட்டல் 30.உறிஞ்சல் 31.குருதி வாங்கல் 32.பீச்சு என்பன புறமருந்து முப்பத்திரண்டாம் எனக் கூறுவர்8

மருந்து உண்ணும் போது சேர்க்கும் பொருள்கள்

மருந்து உண்ணும் போது சில பொருட்களை உடன் சேர்த்துக் கொள்வர் அப்படி சேர்த்துக் கொள்ளும் பொருள் மருந்துக்கு துணையாகவும் உணவுப் பொருளாகும் அமைவதுண்டு.
மருந்து உண்ணும் போது சில மருந்துகள் நல்ல முறையில் பக்குவம் பெறாத இயல்பில் அமைந்துவிடும் அவ்விதம் அமைந்த மருந்துகள் நோயைப் போக்கும் வல்லமை கொண்டதாக அமையாது மேலும் அம்மருந்தின் குற்றத்தை நீக்கவும் வழி அறிந்து இருந்தார்கள் சித்தர்கள்.

இரும்பு முதலிய உலோகங்கள் ஆகிய பற்பம், செந்தூரம், மாத்திரை என்னும் இவைகளால் நேர்ந்த தோஷங்களுக்கு அயப்பற்பம் இவைகளாலும்

பாஷாண பற்பம் செந்தூரம் மாத்திரை என்னும் இவற்றால் நேர்ந்த தோஷங்களுக்கு லவன செந்தூரம் பற்பம் முதலியவைகளாலும்

மற்றை சரக்குகளால் நேர்ந்த தோஷங்களுக்கு மிளகு குடிநீராலும்

அனுபான திரவியங்களால் நேர்ந்த தோஷங்களுக்கு இஞ்சி சாரினாலும்

குடிநீர் வகையால் நேர்ந்த தோஷங்களுக்கு உத்தாமணி சமூக சாற்றினாலும்

பானங்களால் நேர்ந்த தோஷங்களுக்கு தேடினாலும் நிவாரணம் உண்டாம் என்பர்.9

உடற் தத்துவம்

இவ்வுடம்பு பருமை நன்மை என்னும் மூவகையால் அமைந்தது மெய் உணர்வு வழியில் இதனை பழக்கினால் உயிர் வளரும்

உடம்பை வளர்க்கும் உபாயமறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே 10
உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பே ஆலயம் 11

என்பது திருமூலர் வாக்கு. நம் உடல் நலத்தை காக்க நல்ல பழக்க வழக்கங்களை கடைபிடித்து ஆரோக்கியமான வாழ்வினை மேற்கொள்ள வேண்டும் என்றும்

அவ்உடம்பே இறைவன் வாழும் ஆலயம் என்பது சித்தர் பெருமானின் கருத்தாகும்

முடிவுகள்

ஐம்புலன்களையும் அடக்கி ஆண்ட சித்தர்கள் தந்த கொடையாம் சித்தர் இலக்கியங்கள். இவ் இலக்கியத்தில் கண்டெடுக்கப்பட்ட பாடுபொருள்கள் ஏராளம். அவற்றுள் உடல் கூறுகள் மருத்துவச் செய்திகள் வானியல் கூறுகள் ஆகியவற்றையும் குறிக்கும் வகையில் இவ் ஆய்வு அமைந்துள்ளது

மேற்கோள்கள்


1. சித்தர்கள் கண்ட விஞ்ஞானம்-தத்துவம் சாமி சிதம்பரனார் பக்கம் 22
2. அகத்தியர் ஞானப் பாடல்கள் பக்கம் 293.
3. தமிழ் சித்தர் இலக்கியம்-நிர்மலா மோகன் (சிவவாக்கியர் பாடல்) பக்கம் 147
4. கடுவெளி சித்தர் பாடல் ஆனந்த களிப்பு பாடல் 5
5. திருமூலர் கருக்கிடைக்கண்டு பாடல் 16
6. போகர் பக்கம் 640
7. போகர் 7000 ஓர் ஆய்வு - முனைவர் இரா பாஸ்கரன் பக்கம் -173
8. குணப்பாடம் இரண்டாம் மூன்றாம் பகுதிகள் -டாக்டர் ஆர். தியாகராஜன் பக்கம் 58
9. ராஜ வைத்தியம் மகுடம் என்னும் தேரையர் அருளிச்செய்த யமக வெண்பா -ஹக்கீம் பா முகமது அப்துல்லா சாய்பு பக்கம் 263
10. திருமந்திரம் பாடல் 724
11. திருமந்திரம் பாடல் 1823


******** ******** ********* ******** ******** ********* ********* *********